

இந்நூல் தமிழகப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் - ஏனைய உலகநாடுகளிலும் தமிழிலக்கியம் பயிலும் இளங்கலை, முதுகலை மாணாக்கர்களுக்கும், ஆய்வு மாணாக்கர்களுக்கும் (ஆய்வியல்நிறைஞர், முனைவர்பட்ட ஆய்வாளர்கள்) ஒப்பிலக்கியக் கல்வியை எளிமையாக அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும் என்னும் நன்னோக்கத்தில் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

ISBN: 978-81-907706-5-1

மீனாட்சி பதிப்பகம்
2/304, நாராயணபுரம்,
மதுரை - 625 014.

ஒப்பிலக்கியக் கொள்கைகள் - அறிமுகம்

முனைவர் உ.கருப்பத்தேவன்

# ஒப்பிலக்கியக் கொள்கைகள் - அறிமுகம்

(Theories and Concepts of Comparative Literature - An Introduction)




முனைவர் உ.கருப்பத்தேவன்

## நூல் விளக்கப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஒப்பிலக்கியக் கொள்கைகள் - அறிமுகம் |
| ஆசிரியர் | : | முனைவர் உ.கருப்பத்தேவன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | நவம்பர் 2017 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அளவு | : | டெம்மி 1 x 8 |
| தாள் | : | கிரிம் ஓ |
| நூல்கட்டு | : | சாதா அட்டை |
| அச்சு | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | 300 |
| படிகள் | : | 1000 |
| ஒளி அச்சு | : | ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் சென்னை - 600 005. |
| அச்சிட்டோர் | : | விக்னேஷ் பிரிண்டர்ஸ் சென்னை - 600 005. |
| வெளியிடுவோர் | : | மீனாட்சி பதிப்பகம் 2/304, நாராயணபுரம், மதுரை - 625 014. |
| விலை | : | ரூ.235/- |

ISBN No.: 978-81-997706-5-1


# என்னுரை

'ஒப்பிலக்கியக் கொள்கைகள் - அறிமுகம்' (Theories and Cencepts of Comparative Literature - An Introduction) என்னும் இந்நூல் திருத்திய இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் தற்பொழுது வெளிவருகின்ற நவீன இலக்கிய வகைமைப் படைப்புக்களும், இலக்கியத் திறனாய்வு நூல்களும் ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் (Impact of English Literature) வெளிவருவனவே. மாத்யூ ஆர்னால்டு (Mathew Arnold, 1822-1888) என்னும் ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் பிரெஞ்சு இலக்கியத் திறனாய்வு முறைகளை மதித்துப் போற்றினார். அவர் கி.பி.1848இல் 'ஒப்பியல் இலக்கியம்' என்னும் இலக்கியத் தொடரை முதன்முதலாகப் பயன்படுத்தினார். இவருக்கு முன்னரே ஜெர்மானியர் 'ஒப்புமை இலக்கியத்துறை' என்ற தொடரைப் பயன்படுத்தினர். சமூகவியல் சிந்தனையாளரான ஹிப்போலைட் தெயின் (Hippotyte Taine, 1828-1893) என்பவர் இலக்கிய ஆய்வுகளும் திறனாய்வுகளும் அறிவியல்முறையில் அமைய வேண்டுமென்றார். இத்தகைய அறிவியல் முறைப்பட்ட இலக்கிய ஆய்வுகளில் தலையாயது 'ஒப்பிலக்கியத் திறனாய்வு' முறையாகும்.

ஒப்பிலக்கிய ஆய்வு என்பது இலக்கிய ஆய்வு மற்றும் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியின் உயர்நிலையில் தோன்றியதே; நாடு, மொழி, இனம், பண்பாடு இவைகளில் வேறுபட்ட இருமொழி இலக்கியப் படைப்புக்களை ஒப்பிட்டு அணுகும் ஒப்பிலக்கிய ஆராய்ச்சியே ஒப்பிலக்கியத் துறையாகும். மேலைநாடுகளில் தோன்றி வளர்ந்த ஒப்பிலக்கியத் திறனாய்வுத் துறையின் முதிர்நிலையாகத் தமிழில் தோன்றிய ஒப்பிலக்கிய ஆய்வும், ஒப்பீட்டுத் திறனாய்வும் இன்று தமிழகப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தமிழிலக்கியத் துறைகளில் தனித்துறையாகப் பரிணாம வளர்ச்சியைப் பெற்று மென்மேலும் வளர்ந்து வருகின்றது. ஒப்பிலக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து ஆய்வியல் நிறைஞர், ஆய்வியல் அறிஞர் பட்டங்களைப் பெறுவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடிக் கொண்டே வருகின்றது. இதனால் தமிழிலக்கிய ஆய்வுகள் புத்துயிர்ப்பைப் பெற்று விடுகின்றன.

ஒப்பிலக்கிய ஆய்வு மற்றும் ஒப்பிலக்கியத் திறனாய்வு முறைகளால் தான் இன்று தமிழிலக்கியம் உலக அரங்கில் பேசப்படும்